4. அரசினர் சட்டமுன்வடிவு

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சட்டமன்ற (தகவின்மை நீக்கல்) திருத்த சட்டமுன்வடிவு

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டு சட்டமன்ற (தகவின்மை நீக்கல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதிகோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு. அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே. இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

5. தனியார் அலுவல்கள்

(i) சட்டமுன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு தொழிற்சாலைத் தொழிலாளர் களுக்குப் பணிக்கொடை வழங்குதல் சட்டமுன்வடிவு

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குப் பணிக் கொடை வழங்குதல் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு. அனுமதி வழங்கப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) 1971-ம் ஆண்டு மேட்டூர் நகரியம் (ஒழிப்பு—நகராட்சியை விரிவுபடுத்துதல்) சட்டமுன்வடிவு.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு மேட்டூர் நகரியம் (ஒழிப்பு—நகராட்சியை விரிவுபடுத்துதல்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு. அனுமதி வழங்கப்பட்டது.